**MCOP NO:358/2026** **DATE: 23.07.2026**

ம.சா : 1

பெயர் : திரு. நெடிலால்

த/பெ : திரு. துரான் யாதவ்

வயது : 50

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 23.07.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

(சாட்சிக்கு நீதிமன்ற அலுவல் மொழி தெரியாத நிலையில் திருமதி.வினோதினி MS.No.5106/2018, வழக்கறிஞர் மொழிபெயர்ப்பாளராக இருப்பதற்கு இருதரப்பும் சம்மதம் தெரிவித்ததன் பேரில் மொழிபெயர்பாளர் மூலமாக சாட்சியம் பதிவு செய்யபடுகிறது)

நான் இந்த மனுவில் முதல் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை ஹிந்தியில் படித்து காண்பித்தார் கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 18 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்தானது தேசீய நெடுஞ்சாலையில் மத்திய தடுப்புச்சுவர் இடைவெளியே கடக்கும்போது விபத்து ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்பதால் விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். எனது மகனின் வயது, தொழில் மற்றும் வருமானம் ஆகியவற்றை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வயதை காட்டுவதற்கு ஆதார் அட்டையை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன். எனது மகன் தேநீர் கடையில் அவர் டீ மாஸ்டராக பணிபுரிந்து வந்ததால் அவருக்கு சம்பளச்சான்றிதழ் வழங்கப்படாது. எனது பிரமாண பத்திரிக்கையில் எனது மகன் எவ்வளவு மாதச்சம்பளம் பெற்று வந்தார் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மகன் விபத்தின்போது திருமணம் ஆகவில்லை. விபத்தானது எனது மகனின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதால் 2-ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால்

சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் திருமதி.வினோதினி MS.No.5106/2018, வழக்கறிஞர் மொழிபெயர்ப்பாளராக இருந்து சாட்சிக்கு **<u>ஹிந்தியில்</u>** எடுத்துரைத்து அவர் சொல்ல சொல்ல அதை நான் தமிழில் மொழிபெயர்த்து சொன்னேன் என்று தெரிவித்து சான்று வழங்குகிறார்.

x

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.